**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.95/2024 - PW-1**

| | |
|---|---|
| Name | திருமதி. லலிதா |
| Husband/Father Name | கஜேந்திரன் |
| Village /Area | அரக்கோணம் |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | இல்லத்தரசி |
| Age | 74 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 20.11.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 15.02.2010 அன்று நான் அரக்கோணத்தில் என் மகள் ே◌ஹமலதா வீட்டில் நான் இருந்த போது எனது மகள் C.M.C மருத்துவமனை வேலூருக்கு சென்றிருந்தார். மருமகன் ஆசிரியர் என்பதால் பணிக்கு சென்றிருந்தார். பகல் 02.00 மணியளவில் நான் வீட்டில் தனியாக இருந்த போது 3 நபர்கள் வீட்டினுள் நுழைந்து கத்தியால் தலை மீது தாக்கியும் அதை தடுத்த போது வலது கையின் விரல் மீதும் தாக்கினார்கள்.

என்னிடம் இருந்த தாலி சரடு, கம்மல், செல்பேன் ஆகியவற்றை என்னிடம் இருந்து பறித்து சென்றார்கள். நான் சத்தம் போடவே மேற்படி நபர்கள் ஓடிவிட்டார்கள். பிறகு என் மருமகனுக்கு தொலைபேசி மூலமாக தகவல் தெரிவித்தேன். என் மகள் மற்றும் மருமகன் வந்த பிறகு என்னை அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அதன் பின்பு

அரக்கோணம் நகர காவல் நிலையம் சென்று நான் இது சம்பந்தாக புகார் கொடுத்தேன்.

அதன் பிறகு எதிரிகளை அடையாளம் காட்ட வேண்டி போலீசார் வேலூர் மத்திய சிறைக்கு அழைத்து சென்றனர். அங்கு நடத்திய அடையாள அணிவகுப்பில் எங்கள் வீட்டில் வந்து என்னை தாக்கி நகையை பறித்து சென்ற நபரை நான் அடையாளம் காட்டினேன். ஆஜர் எதிரியும் மற்ற எதிரிகளுடன் வந்து என்னுடைய நகையை பறித்து சென்றவர்களில் ஒருவர் ஆவார். அவரையும் நான் அடையாளம் காட்டினேன்.

கம்மலை நீதிமன்றம் மூலமாக மனு தாக்கல் செய்து பெற்றுச் சென்றேன். நீதிமன்றத்தின் மூலம் பெற்றுச்சென்ற கம்மலை நான் இன்று அணிந்து வந்துள்ளேன். அது **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது அதசாஆ,.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி இருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை,

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.20 19:03:30 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.